**லக்கல – பள்ளேகம பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 20 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லக்கல – பள்ளேகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 17,400 ஆன செலவினம் மற்றும் முன்னைய ஆண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 367,500 ஆன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட ரூபா 154,610 பெறுமதியான இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் போது கிடைக்கப் பெற்றிருந்த இரண்டு மோட்டார் சைக்கில்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 122-1-001-1-0000127 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிற்குரிய ரூபா 114,850 ஆன மீதி நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(உ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகைகளிலிருநது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 75,743 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் கொள்வனவாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் பொருள் ஏலவிற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 38,430 தொகை ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்படாமல் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் நிரந்தரமாக்கப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளமாக மீள் நிரப்பப்பட வேண்டிய ரூபா 276,000 தொகை மீள்நிரப்பப்பட வேண்டிய முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 294,058 ஆன ஆண்டின் ஆரம்ப மீதிக்கு நீர் உபகரணங்கள் கொள்வனவுகள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்பட்டு ஆண்டின் விநியோகம் கழிக்கப்படாமல் இறுதி இருப்பு கணிப்பிடப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கையிலுள்ள இருப்பு சரியானதாக இருக்கவில்லை.

(ஒ) ஆண்டினுள் கிடைக்கப் பெற்றிருந்த நீர் இணைப்புக் கட்டணம் ரூபா 62,000 ஆக இருந்த போதிலும், ரூபா 116,200 என கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 54,200 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) நீண்டகாலமாக வங்கி கணக்கிணக்கத்தில் முன்கொண்டு வரப்பட்டிருந்த கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 13,069 பணத்தை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 26,166,163 கூட்டுத்தொகையான 10 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 2,167,054 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

முன்னைய ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 1,839,420 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறே காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதிகளை இனங்கண்டு தேவையான சீராக்கங்களைச் செய்து கணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 694,803 கூட்டுத்தொகையான பெறவேண்டிய 06 கணக்கு மீதிகளைத் தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்தவேண்டிய 04 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,752,055 ஆக இருந்ததுடன், நீண்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் இம்மீதிகளை மீளாய்வாண்டின் போதும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 08 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 8,203,868 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் சுற்றறிக்கை என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | காப்புறுதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது விலை விபரங்கள் கோரி நேரடியாக காப்புறுதி வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், விலைகோரல் மேற்கொள்ளாமல் காப்புறுதி முகவர்கள் மூலம் 09 சந்தர்ப்பங்களில் ரூபா 248,140 தொகைக்கு காப்புறுதி மேவுகைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) 2015 மே 22 ஆந் திகதிய PL/7/3 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சனநாயக நிர்வாகம் தொடர்பாக அமைச்சு செயலாளரின் கடிதம் | சபையின் உறுப்பினர்களாக சேவை புரிந்த இரண்டு அரச உத்தியோகத்தர்களுக்கு தமது நிரந்தர கடமை நிலையங்களிலிருந்து சலுகை முறைமை அடிப்படையில் மோட்டார் சைக்கில்கள் பெற்றுக்கொண்டிருக்கையில் சபையின் உறுப்பினர்களாக இருந்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் மூலமும் மோட்டார் சைக்கில்கள் பெற்றுக்கொண்டிருந்தனர். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,031,210 ஆக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,580,853 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 450,357 அதிகரிப்பைக் காண்பித்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 132,410 தொகையான நிலுவை மீதிகளில் ரூபா 43,900 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த நிலுவையில் 33% பெறுமதியாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை குத்தகை வாடகை மீதி ரூபா 89,630 ஆக இருந்ததுடன், அதில் ஓராண்டிற்கு மேற்பட்ட ரூபா 88,510 ஆன மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்படாமையினால் பட்டியலிடப்பட்ட வருமானங்கள் சரியானதென உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.2.3 ஏக்கர் வரி

05 ஆண்டுகளுக்கு முன்னிருந்து கொண்டு வரப்பட்டுக் காணப்படும் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 60,368 ஆக இருந்ததுடன் அம்மீதியை தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீர்க் கட்டணம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 405,006 ஆக இருந்ததுடன், அந்த மீதியில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 272,887 தொகையான மீதிகளும் உள்ளடங்கியிருந்தது.

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 738,734 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 704,946 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

### 2.2.6 அறிவித்தல் பதாகைக் கட்டணம்

விளம்பர அறிவித்தல் பதாதைகளிலிருந்து வருமானத்தை அறவிடுவதற்காக உப உறுப்புரைகளை விதிக்கப்படாமல் இருந்தமையால் சபை அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு வியாபார நிறுவனங்களில் மற்றும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர அறிவித்தல் பதாதைகளிலிருந்து வருமானத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 நவம்பர் 18 ஆந் திகதிய 25/2014 சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தரமாக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விஞ்சிய 06 உத்தியோகத்தர்களுக்காகாக உள்ளூராட்சி திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்று நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் சம்பள மீளளிப்புச் செய்யப்படாமை காரணமாக மாதாந்தம் ரூபா 240,396 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது.

(ஆ) சபையின் 06 பதவிகளுக்குரிய 14 வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளியே இடமாற்றம் பெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 394,892 தொகையான கடன் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரண்டு செயற்திட்டங்களின் ஊழியர்களுக்கு செக்ரோல் மூலம் ரூபா 23,500 சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், சம்பளம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கு உரிய உரிய நபர்களிடமிருந்து கையொப்பம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

முகவர்கள் மூலம் சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் காப்புறுதி செய்யப்பட்டிருந்ததன் காரணமாக சபைக்கு பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த ரூபா 24,814 ஆன கழிவுத் தொகை இழக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண சபை உறுப்பினர் நிதிஏற்பாட்டின் கீழ் இலக்கம் 96, மொரதன்னயில் குடியிருக்கும் தமித் அனுருத்த என்பவரின் வீட்டிற்காக ரூபா 24,920 செலவில் 10 அடி நீளமான 56 கூரைத்தகடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 34 தகடுகள் இடப்பட்டிருந்தமையால் எஞ்சிய 22 தகடுகள் தொடர்பாக எவ்வித சான்றுகளும் காணப்படவில்லை.

(ஆ) மாகாண சபை உறுப்பினர் நிதிஏற்பாட்டின் கீழ் இலக்கம் 107 தாஸ்கிரியவில் தனியார் அணைக்கட்டொன்றை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்படாமல் ரூபா 25,000 செலவில் சீமெந்து, மெடல், மணல் மற்றும் கற்கள் என்பன உரிய நபருக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) மாகாண சபை உறுப்பினர் நிதிஏற்பாட்டின் கீழ் சாஸரத்ன பிரிவெனாவின் நூலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்படாமல் 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி ரூபா 50,000 செலவில் அஸ்பஸ்டொஸ் கூரைத் தகடு வழங்கப்பட்டிருந்ததுடன், 2015 நவம்பர் 19 ஆந் திகதி வரையிலும் கூரைத்தகடுகள் இடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு கிடைத்த ரூபா 10,000,000 ஆன நிதி ஏற்பாட்டினை இலுக்கும்புற நீர் செயற்திட்ட திருத்தவேலைகள், கஹகல நீர் செயற்திட்ட திருத்தவேலைகள், ரத்கிந்த முதல் மெதஅல வரையான வீதி அபிவிருத்தி மற்றும் ஹத்தொட்ட அமுன உப அலுவலகம், குருவெல மற்றும் இலுக்கும்புற நூலகம் என்பவற்றை திருத்தியமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தன. இச்செயற்திட்டங்களில் நிறைவேற்ற வேண்டிய வேலைப் பகுதிகள் இனங்காணப்பட்டு மதிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் உழைப்பு பகுப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் பொருள், உழைப்பு மற்றும் எரிபொருள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(உ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரத்கிந்த முதல் மெதஅல வரையான வீதி அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கிடையே ரூபா 216,662 அதாவது 40% ஆன குறைவொன்று இருந்தது.

(ஊ) லக்கல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வாடக வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணங்களை அறவிடுவதற்கு துணை விதிகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2014 ஆம் ஆண்டில் பொருளதார அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நிர்மாண வேலைகளுக்குரிய பெயர்ப் பலகை நிர்மாணத்தின் மதிப்பீடுகளில் உட்படுத்தி நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும், பெயர்ப் பலகையை பொருத்துவதற்காக சங்கமொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு பெயர்ப்பலகை பொருத்தியமைக்காக எவ்வித பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாமல் ரூபா 258,700 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) முறையே ரூபா 250,000 மற்றும் ரூபா 85,000 பெறுமதியான மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் பிளொக் கல் உற்பத்தி இயந்திரம் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் சபை வளவில் வைக்கப்பட்டிருந்தன.

(ii) 49-1968 ஆம் இலக்க குபோட்டா உழவு இயந்திரம் 2014 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு 2016 சனவரி மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சபை வளவில் இருந்த ரூபா 133,075 பெறுமதியான நீர்க்குழாய்கள் மற்றும் நிர்மாணப் பொருள் இருப்பொன்று இக்கணிப்பீட்டிலிருந்து கைவிடப்பட்டிருந்தமை 2016 மே 02 ஆந் திகதி கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

வருமான மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 16 செலவினங்களுக்கான ஏற்படுத்தப்பட்ட ரூபா 201,000 தொகையான நிதி ஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 07 வரவு விடயங்களுக்காக ரூபா 204,500 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக லக்கல பள்ளேகம பிரதேச சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உருவாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) வாகன கட்டுப்பாடு

(ஊ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(எ) களஞ்சியக் கட்டுப்பாடு